## ஆறுவது.

# பல்பொருட்பெயர்த்தொகுதி

(௧) சூ.
ஆடக மாசை யீழமேம,மா
டுகாணங் கநகந்தமநியம், வெ
றுக்கைசொன்னம்பொருளோ
டரியே,யீகைநிதியேகருந்தந
ங்காஞ்சநம்,பீதகமாடைதொ
டுக்கமருத்தஞ், சாமீகரம் பூரி
சந்திரமாழை, நிதாநந் தேசிக
ஞ் செந்தாதுவித்தந்,திராவியம்
வேங்கைசாம்பூநதமுறை,சாத
ரூபம்முடல்பண்டமிரணியம்,
பொலமென்றின்னவைபொன்
னெனப்படுமே.

(௨) சூ.
பொன்னும்வெள்ளியுஞ்செ
ம்புமிரும்பு, மன்னவீயமுமை
வகையுலோகம்.

(௩) சூ.
தராவொடு கஞ்சந் தானுங்
கூட்டி, யெழுவகையுலோக
மென்னவும்படுமே.

(௪) சூ.
நவமணிகடவுண்மணி யென்
றிவற்றி, னிகழ்பெயர் நிதியுநி
தாநமுமென்ப.

பொன்னின்பெயர்.
ஆடகம்-மாசை-ஈழம்-ஏம
ம்-மாடு-காணம் - கநகம்-தமநி
யம்-வெறுக்கை- சொன்னம்-
பொருள்-அரி-ஈகை - நிதி-தந
ம் - காஞ்சநம் - பீதகம் - மா
டை-தொடுக்கம் - அருத்தம்-
சாமீகரம்-பூரி - சந்திரம் - மா
ழை-நிதாநம்-தேசிகம்- செந்
தாது-வித்தம்-திராவியம் - வே
ங்கை-சாம்பூநதம்-உறை- சா
தரூபம்-உடல்-பண்டம் - இர
ணியம்-பொலம். ஆ ௩௭.

ஐவகையுலோகமாவன.
பொன்-வெள்ளி - செம்பு-
இரும்பு-ஈயம். ஆ ௫.

எழுவகையுலோகமாவன.
ஐவகையோடு-தரா-கஞ்
சம். ௨.
ஆ ௭.

* நவமணியின்பெயர்.
நிதி. (௧)
கடவுண்மணிக்குப்பெயர்.
நிதாநம். (௧)

* நவமணிக்குங்கடவுண்மணிக்கும்பெயர்.
நிதி-நிதாநம். ஆ ௨. எனப்பிரிப்பினுமமையும்.



சூத்திரம்.

(௫)
*காணம்பொற்காசே.

(௬) சூ.
மனவுங்காசுமணியின்பொது
ப்பெயர்.

(௭) சூ.
ஆதநஞ்சலாகையகன்மணி
க்காகும்.

(௮) சூ.
மாமணிபதுமராகமாணிக்
கம்.

(௯) சூ.
நித்திலந்தரளமாரமுத்தே.

(௰) சூ.
தரளந்திரட்சி யாகவுஞ்சாற்
றுவர்.

(௧௧) சூ.
வித்துருமந்துகிர் துப்பே
யாத்த, மொத்தபிரவாளந்துவ
ரிவைபவளம்.

(௧௨) சூ.
*அரிபச்சைமரகதமரதகமு
மாகும்.

(௧௩) சூ.
*வச்சிரம்வயிரம்.

(௧௪) சூ.
*வாலவாயம்வைடூரியமே.

(௧௫) சூ.
*மணிநீலமணியே.

(௧௬) சூ.
செங்கை நிதியம்பற்சேத்த
ன்செங்கையிற், சங்கின்வடிவி
னதுசங்கநிதியே.] தே

பெயர்ப்பிரிவு.
பொற்காசின்பெயர்.
காணம். (௧)
மணிப்பொதுப்பெயர்.
மனவு-காசு. ஆ ௨.

அகன்மணிப்பொதுப்பெயர்.
ஆதநம்-சலாகை ஆ ௨.

மாணிக்கத்தின்பெயர்.
மாமணி-பதுமராகம்.
ஆ ௨.

முத்தின்பெயர்.
நித்திலம்-தரளம்-ஆரம்.
ஆ ௩.

தரளமென்பது.
திரட்சிக்குமுரித்து.

பவளத்தின்பெயர்.
வித்துருமம்-துகிர்-துப்பு-
ஆத்தம்-பிரவாளம்- துவர்.
ஆ ௬.

மரகதத்தின்பெயர்.
அரி-பச்சை-மரதகம்.
ஆ ௩.

வச்சிரமணியின்பெயர்.
வயிரம். (௧)
வைடூரியத்தின்பெயர்.
வாலவாயம். (௧)
நீலமணியின்பெயர்
மணி. (௧)
சங்கநிதியென்பது.
சங்கின்வடிவினது.

தே

| சூத்திரம். | பெயர்பிரிவு. |
|---|---|
| (௧௭) | பதுமநிதியென்பது. |
| தேமலரலங்கற்சேந்தன்செங்கையிற் றாமரைவடிவினதுபதுமநிதியே. | தாமரைவடிவினது. |
| (௧௮) சூ. | பதினான்குவகையின்பெயர். |
| + பதினால்வகையுநிதியமெனப்படும். | நிதியம். (௧) |
| (௧௯) சூ. | பண்டாரத்தின் பெயர். |
| கோசந்தண்டம்பண்டாரமாகும். | கோசம்-தண்டம். ஆ௨. |
| (௨௰) சூ. | வெள்ளியின்பெயர் |
| இரசதந்தாரங்களதௌதம் வெள்ளி. | இரசதம்-தாரம்-களதௌதம். ஆ௩. |
| (௨௧) சூ. | வெண்கலத்தின்பெயர். |
| கஞ்சம் வெண்கலமாகக்கருதுவர். | கஞ்சம். (௧) |
| (௨௨) சூ. | பித்தளையின்பெயர். |
| மாயாபுரியாரகூடம்பித்தளை. | மாயாபுரி-ஆரகூடம். ஆ௨. |
| (௨௩) சூ. | செம்பின்பெயர். |
| சீருணந்தாம்பிரஞ் சுற்பஞ் செம்பே. | சீருணம்- தாம்பிரம் - சுற்பம். ஆ௩. |
| (௨௪) சூ. | இரும்பின்பெயர். |
| கருந்தாதுமயமு மிரும்பெனக்கருதுவர். | கருந்தாது-அயம். ஆ௨. |
| (௨௫) சூ. | எஃகின்பெயர். |
| *சத்தியெஃகே. | சத்தி. (௧) |
| (௨௬) சூ. | ஈயத்தின்பெயர். |
| வங்கமுஞ்சீருளுமீயமாகும். | வங்கம்-சீருள். ஆ௨. |
| (௨௭) சூ. | காரீயத்தின்பெயர். |
| நாகங்காரீயமாகக்கருதுவர். | நாகம். (௧) |

+ பதினான்குவகையாவன உலோகமைந்து மணியொன்பதுமாம்.





| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| (௨௮) | தராவின்பெயர். |
| மதுகந் தராவென வைக்கப்படுமே. | மதுகம் (௧) |
| (௨௯) சூ. | இரும்புளவாங்குங்காந்தமணியின்பெயர். |
| வலித்திரும்புள்ளேவாங்குங் காந்தஞ், சொலத்தகுஞ் சலாகைசும்பகமென்ப. | சலாகை-சும்பகம். ஆ௨ |
| (௩௰) சூ. | சந்திரனொளியிற்றண்ணீர் காலுமணியின்பெயர். |
| சந்திரனொளியிற் றண்ணீர் காண்மணி, சந்திரகாந்தமெனப்பெயர்சாரும். | சந்திரகாந்தம். (௧) |
| (௩௧) சூ. | சூரியனொளியிற்றீக்காலுமணியின்பெயர். |
| சூரியனொளியிற் றீக்கால்சலாகை,சூரியகாந்தமெனப்பெயர்சொல்லும். | சூரியகாந்தம். (௧) |
| (௩௨) சூ. | பளிங்கின்பெயர். |
| படிகம்பளிங்குபருக்கைகாழாகும். | படிகம்-பருக்கை-காழ். ஆ௩. |
| (௩௩) சூ. | சங்குமணியின்பெயர் |
| அக்குச்சங்குமணியாகுமென்ப. | அக்கு. (௧) |
| (௩௪) சூ. | பலகறையின்பெயர். |
| வட்டிகவடிபலகறைசோகி, வெள்வரியலகென விளம்பவும்படுமே. | வட்டி- கவடி- சோகி - வெள்வரி-அலகு. ஆ௫. |
| (௩௫) சூ. | பலபண்டத்தின்பெயர். |
| பண்ணியங்கூலம்வளமே பண்டம், பண்ணிகாரம்பலபண்டப்பெயரே. | பண்ணியம்- கூலம்- வளம்-பண்டம்-பண்ணிகாரம். ஆ௫. |
| (௩௬) சூ. | அரும்பண்டத்தின்பெயர். |
| அரும்பண்டப் பெயர்தாரமென்றாகும். | தாரம். (௧) |

சூத்திரம்.

(௩௭) ———

கருப்பூரம்பளிதம்.

(௩௮) சூ.

கத்தூரிமான்மதம்.

(௩௯) சூ.

பூதங்காலேகம்வட்டிகைபு
லியென, நால்வகைச்சாந்திற்
மமாகும்.

(௪௰) சூ.

கலவைச்சேறுங்காலேகவண்
ணமுந், தளம்விரை களபமுஞ்
சாந்தின்பொதுப்பெயர்.

(௪௧) சூ.

குங்குமஞ்செஞ்சாந்து.

(௪௨) சூ.

அங்கராகம்பூசுவன

(௪௩) சூ.

தகரமேலங்காசறைமயிர்ச்
சாந்தே.

(௪௪) சூ.

தேய்வையுஞ் செச்சையுஞ்
செறிகுழம்பாகும்.

(௪௫) சூ.

கொட்டலுஞ் சதுர்த்தலும
ப்புதலாகும்.

(௪௬) சூ.

புலர்த்தலும் வரித்தலும் பூ
சலாகும்.

(௪௭) சூ.

எழுதுகோலான்மகளிராகத்
துத்தொழில் பெற வரிப்பது
தொய்யிலாகும்.



பெயர்பிரிவு.

கருப்பூரத்தின்பெயர்.
பாளிதம். (௧)

கத்தூரியின்பெயர்.
மான்மதம். (௧)

நால்வகைச்சாந்தின்பெயர்
பூதம்-காலேகம்-வட்டிகை-
புலி. ஆ௪.

சாந்தின்பொதுப்பெயர்
கலவைச்சேறு-காலேகவண்
ணம்-தளம்-விரை-களபம்.
ஆ௫.

செஞ்சாந்தின்பெயர்.
குங்குமம். (௧)

பூசுவனவற்றின்பெயர்.
அங்கராகம். (௧)

மயிர்ச்சாந்தின்பெயர்.
தகரம்-எலம்-காசறை.
ஆ௩.

செறிகுழம்புஅல்லதுசந்தனக்
குழம்பின்பெயர்.
தேய்வை-செச்சை-ஆ௨.

அப்புதலின்பெயர்
கொட்டல்-சதுர்த்தல்.
ஆ௨.

பூசுதலின்பெயர்.
புலர்த்தல்-வரித்தல். ஆ௨.

மகளிராகத்தெழுதுகோலத்
தின்பெயர்.
தொய்யில். (௧)





சூத்திரம்.

(௪௮) ———

சுடிகையுந் திலதமுஞ்சுட்டி
யுந்திலகம்.

(௪௯) சூ.

புண்டரந்திலகநுதற்புனைகு
றியே.

(௫௰) சூ.

சேலேகஞ்சிந்தூரம்.

(௫௧) சூ.

இங்குலிகஞ்சாதிலிங்கம்.

(௫௨) சூ.

குங்குலுவுங்குக்குலுவுங்குங்
கிலியமாகும்.

(௫௩) சூ.

இங்குபெருங்காய மென்றி
சைத்தனரே.

(௫௪) சூ.

ஆத்தமுந்துப்பு மரக்கின்
பெயரே.

(௫௫) சூ.

சுண்டிசுக்கு.

(௫௬) சூ.

துடியேயேலம்.

(௫௭) சூ.

அதிங்க மட்டி யதிமதூ மா
கும்.

(௫௮) சூ.

சாமரைகவரிசவரிசீகரம்.

(௫௯) சூ.

அறுகுவெள்ளரிசி கூட்டிய
து அச்சுதம்.



பெயர்ப்பிரிவு.

திலகத்தின்பெயர்
சுடிகை-திலதம்-சுட்டி.
ஆ௩.

நுதற்புனைகுறியின்பெயர்.
புண்டரம்-திலகம். ஆ௨.

சிந்தூரத்தின்பெயர்
சேலேகம். (௧)

சாதிலிங்கத்தின்பெயர்
இங்குலிகம். (௧)

குங்குலியத்தின்பெயர்.
குங்குலு-குக்குலு. ஆ௨.

பெருங்காயத்தின்பெயர்
இங்கு. (௧)

அரக்கின்பெயர்.
ஆத்தம்-துப்பு. ஆ௨.

சுக்கின்பெயர்.
சுண்டி. (௧)

ஏலத்தின்பெயர்.
துடி. (௧)

அதிமதூரத்தின்பெயர்.
அதிங்கம்-அட்டி. ஆ௨.

சாமரையின்பெயர்.
கவரி-சவரி-சீகரம். ஆ௩.

அச்சுதமென்பது.
அறுகும்வெள்ளரிசியுங்கூட்
டியது.

| சூத்திரம். | பெயர்பிரிவு. |
|---|---|
| (௬௰) ——— | பிரப்பென்பது. |
| கொள்கல மொன்றிற் குறுணியாகப்,பல் லுணவு பெய்து பாரிப்பதுபிரப்பே. | குறுணியொவ்வொன்றதாகக்கொள்கலத் துட் பல்லுணக்கள்பரப்பிவைப்பது. |
| (௬௧) சூ. இந்தநங்காட்டந் துவரிவை விறகே. | விறகின்பெயர். இந்தநம்-காட்டம்-துவர். ஆ௩. |
| (௬௨) சூ. சமிதையோமவிறகெனச்சாற்றுவர். | ஓமவிறகின்பெயர். சமிதை. (௧) |
| (௬௩) சூ. ஞெகிழிகொள்ளி நெருப்புறுவிறகாம். | நெருப்புறுவிறகின்பெயர். ஞெகிழி-கொள்ளி. ஆ௨. |
| (௬௪) சூ. முளரியலாதமுற் கங்கடைக்கொள்ளி. | கடைக்கொள்ளியின்பெயர். முளரி-அலாதம்-உற்கம். ஆ௩. |
| (௬௫) சூ. கந்துளுமிருந்தையுங்கரியெனக்கூறுவர். | கரியின்பெயர். கந்துள்-இருந்தை. ஆ௨. |
| (௬௬) சூ. அடலைவெண்பலி சாம்பராகும். | சாம்பரின்பெயர். அடலை-வெண்பலி. ஆ௨. |
| (௬௭) சூ. *காப்பும்பொடியும்பற்பமும்விபூதியுந், திருநீறதனைச்செப்புங்கிளவி. | திருநீற்றின்பெயர். காப்பு-பொடி-பற்பம்-விபூதி. ஆ௪. |
| (௬௮) சூ. *சாணிபுண்ணிய சாந்தமெனப்படும். | சாணியின்பெயர். புண்ணியசாந்தம். (௧) |
| (௬௯) சூ. சுதையுங்களபமுஞ் சுடுசுண்ணச்சாந்தே. | சுடுசுண்ணச்சாந்தின்பெயர். சுதை-களபம். ஆ௨. |
| தூ | தூ |



| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| (௭௰) ——— தூமமு மரியுந் தூபமும் புகையே. | புகையின்பெயர். தூமம்-அரி-தூபம். ஆ௩ |
| (௭௧) சூ. குரூஉப்புகைநறைபடு கொழும்புகையாகும். | மணப்புகையின்பெயர். குரூஉப்புகை. (௧) |
| (௭௨) சூ. *இமசலஞ் சீதநீர் பனிநீர்க்கெய்தும். | பனிநீரின்பெயர். இமசலம்-சீதநீர். ஆ௨. |
| (௭௩) சூ. பிதிர்சிதர்பராகந் தகர் சின்ன பின்னந், துகளுநீறுஞ்சுண்ணமுந்தாதும்,பொடியின்பெயரோபுழுதியுமாகும். | பொடியின்பெயர். பிதிர்-சிதர்-பராகம்-சின்னபின்னம்-துகள்-நீறு-சுண்ணம்-தாது-புழுதி. ஆ௯. |
| (௭௪) சூ. *காவிக்கல்செங்கல்கைரிகந்தாது. | காவிக்கல்லின்பெயர். செங்கல்-கைரிகம்-தாது. ஆ௩. |
| (௭௫) சூ. கழிப்புறு குறுமலங் காட்டமெனப்படும். | கழிப்புறுகுறுமலத்தின்பெயர் காட்டம். (௧) |
| (௭௬) சூ. இலவின்பஞ்சின் பெயர்பூளையாகும். | இலவின்பஞ்சின்பெயர். பூளை. (௧) |
| (௭௭) சூ. கார்ப்பாசம்பரி பன்னல்பருத்தி. | பருத்திப்பஞ்சின்பெயர். கார்ப்பாசம்-பரி- பன்னல். ஆ௩. |
| (௭௮) சூ. துய்யேபஞ்சிற் றொடர்நுனியாகும். | பஞ்சினுனியின்பெயர். துய். (௧) |
| (௭௯) சூ. புன்கமிதவைபொம்மல்போநக,மந்நமோதநமயினியடிசில்,பாளிதம்பொருகுமிசைபதம் | சோற்றின்பெயர். புன்கம்-மிதவை-பொம்மல் போநகம்-அந்நம் - ஓதநம்-அயினி- அடிசில் - பாளிதம்-பொ |

சூத்திரம்.

ம்பால்புகா, வமலையுணவு துப் பசநங்கவளஞ், சொன்றி நிமி ன் மடைகூழ்புழுக்க, லொன் றிய மூால் சோறென வுரைப் பர்.

(௮௰) சூ.

*பொதிசோறு ற்றுணுத்தோ ட்கோப்பாகும்.

(௮௧) சூ.

உண்டிபதம்வல்சியுணுமிசை தல்பக்கித்த,லயின் றனுங்கல்வி ழுங்கறுய்த்தன், மேயதலயிற னுகர்தலருந்த,லுண்டறின்றல் பருகுத லென்றிவை, பண்பிற் றெழிலைப்பகருங்கிளவி.

(௮௨) சூ.

கூழெனும்பெயரொப் பொ ருளிற்குமாகும்.

(௮௩) சூ.

அடப்படுவதடிசில்.

(௮௪) சூ.

புழுக்குவதுபுழுங்கல்.

(௮௫) சூ.

அமிழ்தமவியுந்தெய்வவுண வே.

(௮௬) சூ.

பலியுஞ்சருவுமப் பெயர்ப் பால.

(௮௭) சூ.

கருனைபதனமைத் துப்பொ ரிக்குஞ்சிற்றுணவு.

(௮௮) சூ.

ஆவிவெந்தைபிட்டு.

பெயர்பிரிவு.

பொருகு-மிசை-பதம்-பால்-புகா-அமலை-உணவு- துப்பு-அசநம்-கவளம்- சொன்றி-நிமிரல் - மடை-கூழ்-புழுக்கல்-மூால். ஆ. ௨௫.

பொதிசோற்றின்பெயர்.

ஆற்றுணு-தோட்கோப்பு.

ஆ. ௨.

உண்டொழிலின்பெயர்.

உண்டி-பதம்-வலசி-உணு-மிசைதல்--பக்கித்தல்- அயின்றல்-நுங்கல்-விழுங்கல்-துய்த்தல்-மேய்தல்-அயிறல் - நுகர்தல்-அருந்தல்-உண்டல் - தின்றல்-பருகுதல். ஆ. ௰௭.

கூழெனும்பெயர்.

ஏப்பொருளிற்குமுரித்து.

அடிசிலென்பது.

அடப்படுவதற்குரித்து.

புழுங்கலென்பது.

புழுக்குவதற்குரித்து.

தெய்வவுணவின்பெயர்.

அமிழ்து-அவி ௨.

மற்றுந்தெய்வவுணவின்பெயர்

பலி-சரு ௨.

ஆ. ௪.

பொரிக்கறியின்பெயர்.

கருனை. (௧)

பிட்டின்பெயர்.

ஆவி-வெந்தை. ஆ. ௨.



சூத்திரம்.

(௮௯) ———

அஃகுல்லியுக்காரி.

(௯௰) சூ.

மோதகமிலட்டுகம்.

(௯௧) சூ.

பில்லடைசஃகுல்லி.

(௯௨) சூ.

பூரிகநொலையல்கஞ்சந்தோசை, பேதவகைப் பெயரப்ப மாகும்.

(௯௩) சூ.

நவணையுமிடியுந் தினை நுண் பிண்டி.

(௯௪) சூ.

அப்பம்பிட்டோடஃகுல்லி யிடியெனச்,செப்பியவெல்லா ஞ்சிற்றுண்டியாகும்.

(௯௫) சூ.

வறையலோச்சை.

(௯௬) சூ.

மலாவகம்பிண்ணாக்கே.

(௯௭) சூ.

துவையேகூட்டமைத்தடுந் தொடர்பிறவும், பருகு வனவ வையேபுளிங்கறியாகும்.

(௯௮) சூ.

*கறிநீடாணம்.

(௯௯) சூ.

பாகேகுழம்பு.

(௱) சூ.

கஞ்சிகாடிமோழை.

(௱௧) சூ.

ததியுமளையுந்தயிரெனமொ ழிப.

பெயர்ப்பிரிவு.

உக்காரியின்பெயர்.

அஃகுல்லி. (௧)

மோதகத்தின்பெயர்.

இலட்டுகம். (௧)

பில்லடையின்பெயர்.

சஃகுல்லி. (௧)

அப்பவர்க்கத்தின்பெயர்.

பூரிகம் - நொலையல் - கஞ்சம்-தோசை. ஆ. ௪.

தினைமாவின்பெயர்.

நவணை - இடி. ஆ. ௨.

சிற்றுண்டியெனும்பெயர்.

அப்பம்-பிட்டு - அஃகுல்லி-இடி - முதலியவெல்லாவற்றிற் குமுரித்து.

வறையலின்பெயர்.

ஒச்சை. (௧)

பிண்ணாக்கின்பெயர்.

மலாவகம். (௧)

புளிங்கறியின்பெயர்.

துவை. (௧)

கறியின்பெயர்.

நீடாணம். (௧)

குழம்பின்பெயர்.

பாகு. (௧)

கஞ்சியின்பெயர்.

காடி-மோழை. ஆ. ௨.

தயிரின்பெயர்.

ததி-அளை. ஆ. ௨.

சூத்திரம்.

(௱௨) ———

பயமுஞ்சீரமு மமுதமும்பா[லே.

(௱௩) சூ.

இழுதுங்கிருதமுந் துப்புநெய்யே.

(௱௪) சூ.

ஆச்சிய மென்று மதன் பெயராகும்.

(௱௫) சூ.

முசரோ தக்கிர மோரென்றுரைக்கும்.

(௱௬) சூ.

ஐயங்கவீந நவநீதம் வெண்ணெய்

(௱௭) சூ.

பிரசமுமதுவுந்தேனெனப்[பேசுவர்.

(௱௮) சூ.

கட்டியும்விசயமுங் குளமுங் கன்னலு, மொட்டியப்பாகுமக் காரமுஞ் சருக்கரை.

(௱௯) சூ.

கண்டம்பாளிதங் கண்டசருக்கரை.

(௱௰) சூ.

உண்டையயிர்புல்லகண்டமொருவிகற்பம்.

(௱௰௧) சூ.

இக்குநறவே தேன்முருகுதொப்பி,நறவுபிரசந் தணியல்சுரைபடு,வேரிமட்டுத் தேறல்சாறு, பாநம் வடிபிழி மதுவழி தொண்டி,யரிட்டமுஞ் சாதியுங்கள்ளாம்.

பெயர்ப்பிரிவு.

பாலின்பெயர்.

பயம்-சீரம்-அமுதம். ஆ. ௩.

நெய்யின்பெயர்.

இழுது-கிருதம்-துப்பு. ஆ. ௩.

மற்றுநெய்யின்பெயர்.

ஆச்சியம். (௧) ஆ. ௪.

மோரின்பெயர்.

முசர்-தக்கிரம். ஆ. ௨.

வெண்ணெய்யின்பெயர்.

ஐயங்கவீநம்-நவநீதம். ஆ. ௨.

தேனின்பெயர்.

பிரசம்-மது. ஆ. ௨.

சருக்கரையின்பெயர்.

கட்டி-விசயம்-குளம்-கன்னல்-பாகு-அக்காரம். ஆ. ௯.

கண்டசருக்கரையின்பெயர்.

கண்டம்-பாளிதம். ௨.

மற்றுங்கண்டசருக்கரையின் பெயர்.

உண்டை-அயிர்-புல்லகண்டம். ௩.] — ஆ. ௫.

கள்ளின்பெயர்.

இக்கு-நறவே-தேன்-முருகு-தொப்பி-நறவு-பிரசம்-தணியல்-சுரை-படு-வேரி-மட்டு-தேறல்-சாறு-பாநம்-வடி-பிழி-மது-வழி-தொண்டி-அரிட்டம்-சாதி. ௨௨.





சூத்திரம்.

(௱௧௨) ———

அருகிக்கௌவையும் விளம்பியுமாகும்.

(௱௧௩) சூ.

பாலிசுமாலி யாலி மருட்டம், மாலிமுண்டகஞ்சாலிமாரி,பாடலி மௌலி சிக்கர்ஞாளி, பாணிகுந்திமதுகரஞ்சுவிகை, யாசவமாம் பலம்பியம்பதை, மேதைகஞ்சாவிகுணிசுலோகி,பேது வகைக் கட்பெயரென வறைவர்.

(௱௧௪) சூ.

பாநம்பருகுவன வெவற்றிற்கும்பெயரே.

(௱௧௫) சூ.

அமிழ்தின்பெயரேமருந்தெனலாகும்.

(௱௧௬) சூ.

ஆலங்காரிகடுவிடநஞ்சே.

(௱௧௭) சூ.

துற்றியுண்பன.

(௱௧௮) சூ.

திற்றிதின்பன.

(௱௧௯) சூ.

இலைநுகர்விலங்கி னுணவுகுளகென்ப,

(௱௨௰) சூ.

பறவைக்குமொருசார்விலங்கிற்கும்முணவிரையு முண்டியுமெனப்பெயர்பெறுமே.

பெயர்ப்பிரிவு.

மற்றுங்கள்ளின்பெயர்.

கௌவை-விளம்பி. ௨.

மற்றுங்கள்ளின்பெயர்.

பாலி-சுமாலி-ஆலி-மருட்டம்-மாலி-முண்டகம்-சாலி-மாரி-பாடலி-மௌலி-சிக்கர்-ஞாளி-பாணி-குந்தி-மதுகரம்-சுவிகை-ஆசவம்-ஆம்பல்-அம்பி-அம்பதை-மேதை-கஞ்சா-விகுணி-சுலோகி. ௨௪. ஆ. ௪௮.

பாநமென்பது.

பருகுவனவெவற்றிற்குமா[ம்.

அமிழ்தின்பெயர்.

மருந்து. (௧)

நஞ்சின்பெயர்.

ஆலம்-காரி-கடு-விடம். ஆ. ௪.

உண்பனவற்றின்பெயர்.

துற்றி. (௧)

தின்பனவற்றின்பெயர்

திற்றி. (௧)

இலைநுகர்விலங்கினுணவின் பெயர்.

குளகு. (௧)

பறவையுணவிற்குமொருசார் விலங்கினுணவிற்கும்பெயர்.

இரை-உண்டி. ஆ. ௨.

| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| (௱௨௧) —— மிச்சிலெச்சிலுச்சிட்டமொழிபொருள். | ஒழிபொருளின்பெயர். மிச்சில்-எச்சில்-உச்சிட்டம். ஆ ௩. |
| (௱௨௨) சூ. துப்பேசாதநந் துணைக்காரணமாம். | துணைக்காரணத்தின்பெயர். துப்பு-சாதநம். ௨. |
| (௱௨௩) சூ. ஒக்குமதற்கேயுபகரணப் பெயரே. | மற்றுந்துணைக்காரணத்தின் பெயர். உபகரணம். (௧) ஆ ௩. |
| (௱௨௪) சூ. உபயமுமுகளமுமோரிரண்டாகும். | இரண்டின்பெயர். உபயம்-உகளம். ஆ ௨. |
| (௱௨௫) சூ. வெண்டேர், கானல் பேய்த்தேராகும. | பேய்த்தேரின்பெயர். வெண்டேர்-கானல். ஆ ௨. |
| (௱௨௬) சூ. துணையறைதூக்கஞ்சல்லியாகும். | சல்லியின்பெயர். துணை-அறை-தூக்கம். ஆ ௩. |
| (௱௨௭) சூ. மகிழின் பரலு நெல்லின்மணியு, மனையவையலகெனும் பெயரவாகும். | அலகெனும்பெயர் மகிழின்பரற்கு நென்மணிக்குமுரித்து. |
| (௱௨௮) சூ. ஒளியும்பந்தியு மொழுங்கு நிரையாகும். | நிரையின்பெயர். ஒளி-பந்தி-ஒழுங்கு. ஆ ௩. |

திவாகரவரலாறு.

வருநற்கங்கைவடதிசைப்பெருமையுந், தென்றிசைச்சிறுமையுநீக்கிய குறுமுநி, குண்டிகைப்பழம்புனற்காவிரிப்பெரும்பதி, யம்பற்கதிபதிசேந்தன்றிவாகரத், தாறுவதுபல்பொருட்பெயர்த்தொகுதி

முற்றிற்று.



# செயற்கைவடிவப்பெயர்த்தொகுதி.

| சூத்திரம். | பெயர்ப்பிரிவு. |
|---|---|
| (௧) —— எண்ணியவெழுவகையுலோகத்தின் மரத்தின், மண்ணிற்றோலி னூலின் மற்றுந், திண்மைசெய்வடிவே செயற்கைவடிவாகும். | செயற்கைவடிவாவன. எழுவகையுலோகமுதலியவற்றாற்செய்யப்படும்வடிவாம். |
| (௨) சூ. கழுமுண்மூவிலைவேன்முத்தலைகழுச்சத்தி, வருபவைசூலப்படையெனவழங்கும். | சூலப்படையின்பெயர். கழுமுள்-மூவிலைவேல்-முத்தலை-கழு-சத்தி. ஆ ௫. |
| (௩) சூ. பரசுகணிச்சிநவியந்தண்ணம், பாலமென்றைந்துமழுவின் பெயரே. | மழுவின்பெயர். பரசு-கணிச்சி - நவியம்-தண்ணம்-பாலம். ஆ ௫. |
| (௪) சூ. திகிரிநேமியாழிவளையெஃகஞ், சுதரிசநம் பரிதி சக்கரத்துறுபெயர். | சக்கரத்தின்பெயர். திகிரி-நேமி-ஆழி-வளை-எஃகம்-சுதரிசநம்-பரிதி. ஆ ௭. |
| (௫) சூ. சிலைதநுவேணுக் கார்முகஞ்சாப,முனியேசார்ங்கஞ்சராசநம்பிநாகங், கோதண்டந் தவர்கொடுமரந் துரோணம், வார்வில்லென்பமதிநூற்புலவர். | வில்லின்பெயர். சிலை-தநு-வேணு - கார்முகம்-சாபம்-முனி-சார்ங்கம்-சராசநம்-பிநாகம்- கோதண்டம்-தவர்-கொடுமரம்-துரோணம். ஆ ௰௩. |
| (௬) சூ. பிநாகம்பிஞ்சகன் பெருஞ்சிலைப்பெயரே. | சிவன்வில்லின்பெயர். பிநாகம். (௧) |
| (௭) சூ. சார்ங்க மாயோன் றநுவின் பெயரே. | மாயோன்வில்லின்பெயர். சார்ங்கம். (௧) |